செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1110 | 1970 ஆகஸ்ட் 17 திங்கட்கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED 8 Periodicals Division Library

## ஒரே இரவிலேயே குடிசைகள் முளைக்கின்றன

# காணிகள் ஆக்கிரமிப்பு இங்கும் பரவி விட்டது!



மனிதன் தாங்க முடியாத அளவுக்கு ஒரே உஷ்ணம். இந்த அழகி தனது வனப்பான மார்பகங்களையே திறந்து விட்டுவிட்டாள் என்றால் எவ்வளவு உஷ்ணம் என்பது புரிகிறதல்லவா? மேற்கு நாடொன்றில் நடைபெற்ற ஜாஸ் வாத்திய இசை விழாவொன்றில் இதுபோன்று பல குமரிகள் உஷ்ணம் தாங்க முடியாமல் மேனியைத் திறந்துவிட்டனர்.

**இந்தியாவில் தற்போது திட்டமிட்டு நடத்தப்பட்டு வரும் காணி ஆக்கிரமிப்பு இயக்கம் போன்றதொரு இயக்கம் இப்போது இலங்கையிலும் சில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.**

அரசாங்கத்துக்கும் பணக்காரர்களுக்கும் உரிய காணிகளில் பலவந்தமாக நுழைந்த கிராமவாசிகள் வீடுகளைக் கட்டி குடியேற ஆரம்பித்துள்ளனர்.

பொல்காவலை, அளவை பகுதிகளில் இதுபோன்ற பல குடியேற்றங்கள் நடந்திருக்கின்றன.

காணிகளில் பலவந்தமாக குடியேறுவோர் ஒரே இரவிலேயே குடிசைகளைக் கட்டிவிடுகின்றனர். காணிகளை ஆக்கிரமிப்பு செய்யும் பலர் தங்களுக்குள்ளாகவே காணிகளைப் பங்கு போட்டு வேலியும் அடைத்துக்கொள்கின்றனர்.

பொல்காவலை, அளவை பகுதிகளில் இப்போது நூற்றுக்கணக்கானோர் காணி ஆக்கிரமிப்பு செய்துள்ளனராம்.

இக் காணி ஆக்கிரமிப்பால் பணக்காரர்கள் தங்களின் காணிகளை இரவு, பகலாகக் காவல் காக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ர)

### மீனாட்சி



அம்பலகாரரின் பிரார்த்தனைக்கு ஆடையுடன் சென்ற பாதிரியாருக்கு எப்படி இருந்திருக்கும்?
அவருக்குத்தான் அது தெரியும்!

## பெட்ரோல் ஊற்றி தீ மூட்டினர்

ஸாம்பியா, ஆக. 16

பலவந்தமாக தீமூட்டப்பட்ட, ஸாம்பியாவின் ஆளும் கட்சி அதிகாரி ஒருவர் ஆஸ்பத்திரியில் ஜீவமரணப் போராட்டம் நடத்துகின்றார்.

கட்சியின் உள்ளூர் கிளைத் தலைவரான ஜோன் என்னும் இந்நபர், வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் கோஷ்டியினால் பிடிக்கப்பட்டு உடல் முழுவதும் பெட்ரோல் ஊற்றி தீமூட்டப்பட்டார்.

இம் மாதம் 27-ம் திகதி உள்ளூர் தேர்தல் நடைபெறவிருப்பதை அடுத்தே கட்சி மோதல்கள் ஏற்பட்டன. (ர)

## மலேஷிய மந்திரி வந்தார்

மலேஷிய போக்குவரத்து மந்திரியான திரு. வி. மாணிக்கவாசகம் நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

சோவியத் ரஷ்யாவுக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு செல்லும் வழியிலேயே திரு. மாணிக்கவாசகம் கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்தார். போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்தன, மலேஷிய மந்திரியை வரவேற்றார். (ர)

## இரவு 8½ மணி வரை கடை திறப்பதில் புதிய சிக்கல்!

"இரவு 8-30 மணிவரை கடைகளைத் திறக்கும் பட்சத்தில் கடை முதலாளிமார் மேலதிக ஊழியர்களை சேவைக்குச் சேர்த்துக் கொள்வார்களா?"

தொழில் திணைக்களத்துக்கு இவ்வாறு சந்தேகம் தோன்றியுள்ளது.

நகரங்களில் உள்ள கடைகளை காலை 8 மணிமுதல் இரவு 8-30 மணிவரை திறந்துவைக்க தொழில் மந்திரி கூறிய திட்டத்தை அடுத்தே தொழில் திணைக்களத்துக்கு இச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

தற்போதுள்ள தொழில் சட்டத்தின்படி எந்த ஒரு ஊழியரையும் ஒன்பது மணி நேரத்துக்கு அதிகமாக வேலை செய்யும்படி முதலாளிமார் கோர முடியாது. அதே சமயம் வாரத்துக்கு 12 மணி நேரத்துக்கு மேல் மேலதிக நேர வேலையும் (ஓவர்டைம்) வழங்க முடியாது.

12½ மணி நேரத்துக்குக் கடை திறந்து வைக்கும் திட்டம் அமுலாகினால் வாரம் 19½ மணிநேரம் மேலதிக நேர வேலை வழங்க வேண்டி நேரிடும்.

இதைத் தவிர்ப்பதற்குஇரு நேரமும் ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டால் ஒவ்வொரு ஊழியரும் 6¼ மணி நேரமே வேலை செய்ய நேரிடும்.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் 12½ மணிநேர கடைதிறப்பு கைகூடுமா என இப்போது சந்தேகம் எழுந்துள்ளது.

## எயர் சிலோன் புதிய அங்கத்தவர் மூவர் தெரிவு

எயர் சிலோன் லிமிட்டட் ஸ்தாபனத்தின் புதிய அங்கத்தவர்களாக திரு. ஸாம் எச். சில்வா, திரு. ஐ. பி. சி. மென்டிஸ், திரு. வி. காரளசிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (க)

## தடை செய்யும் முயற்சிக்கு தமிழரசுக் கட்சி கண்டனம்

இந்தியாவில் இருந்து பத்திரிகைகள், சஞ்சிகைகள் இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்தவோ அல்லது தடை செய்யவோ எடுக்கப்படும் முயற்சிகளை தமிழரசுக் கட்சி கண்டித்துள்ளது.

சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திலேயே கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

வானொலியில் தமிழ் திரைப்பட பாடல்கள் ஒலிபரப்பப்படுவதை நிறுத்தும் உத்தேச திட்டம் பற்றியும் இக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப, உத்தேச திட்டங்களை கைவிடும்படி நிர்வாகக் கமிட்டி அரசாங்கத்தைக் கோரியுள்ளது. (ர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைப்பிடித்த மனைவியைக் கைவிட்டு

# மாமியின் இதயத்திலே இடம் பிடித்தான் காளை

### தருணம் பார்த்திருந்து இருவரும் கம்பி நீட்டல்

புத்தளம், ஆக. 16

மாமியாரின் கடும் எதிர்ப்புக்கிடையே கன்னியைக் கைப்பிடித்த காளை ஒருவன், சில நாட்களின் பின் அக் கன்னியை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அந்த மாமியையே கவர்ந்து சென்ற ருசிகரமான சம்பவமொன்று அண்மையில் புத்தளப் பகுதியில் உள்ள குடியேற்றத் திட்டமொன்றில் நடைபெற்று உள்ளது.

இப்பகுதி குடியேற்றத் திட்டத்தில் அவள் ஒருத்தித்தான் மிகவும் அழகில் சிறந்தவளாம். அதே போன்று அழகில் சிறந்த மன்மதன் ஒருவனும் அப்பகுதியில் இருந்தான். இருவருக்குமிடையே காதல் ஏற்பட்டதால் கன்னி அந்தக் காளையை உயிருக்குயிராக நேசித்தாளாம். காளையும் இதற்குச் சளைத்தவனல்ல. அக் கன்னியை எப்படியும் அடைந்து விடுவது என்று தீவிரமாக "உழைத்து" வந்தான்.

இவனது உழைப்புக்கு பெரிதும் முட்டுக்கட்டையாக இருந்தாள் அக்கன்னியின் தாய். "அவனோடு பேசக்கூடாது. பார்க்கக் கூடாது. மறுபடியும் கதைத்தால் உன்னைத் துண்டுதுண்டாக வெட்டி விடுவேன்!" எனக் கடுமையாக எச்சரிக்கை செய்தாள்.

ஆனால், காதல் போதை ஏறிவிட்ட காதலர்களுக்கு இதெல்லாம் ஒரு துரும்பாகத் தெரிந்தது. காதலர்களின் கடும் போராட்டத்தின் பலனாக தாய் மனம் இரங்கினாள். காதலர்களுக்கு மாபெரும் வெற்றி கிட்டியது. ஜாம் ஜாமென்று திருமணமும் நடைபெற்றது.

நாட்கள் உருண்டோடின. இளந் தம்பதிகளிடையே மனக் கசப்பும், குரோதமும் உருவெடுத்தன. கணவன் மனைவியை அடிக்கவும் செய்தான். இதற்கிடையில் ஆரம்பத்தில் கடும் எதிர்ப்புக் காட்டிவந்த மாமியார் தற்போது அக்காளையின் மீது மோகம் கொள்ள ஆரம்பித்தாள். காளையும் தன் மனைவிக்குத் தெரியாமல் மாமியுடன் தொடர்பு வைத்துக் கொண்டான்.

இதை எப்படியோ அறிந்து கொண்ட அவ்விளம் பெண் தாயையும், கணவனையும் கண்டிக்கவே நல்லதொரு தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

மனைவி கர்ப்பமாகியவுடன் இதுதான் சந்தர்ப்பம் என நினைத்த புதுச் சோடியினர் புது உலகை நோக்கிப் பறந்து சென்றுவிட்டனர். அவர்கள் தற்போது எங்கே தேனிலவை ருசித்துக் கொண்டிலிக்கின்றனரோ தெரியவில்லை. அருமைக் கணவனையும், அருமைத் தாயையும் பறிகொடுத்து விட்டு வயிற்றில் பிள்ளையோடு துடி துடித்துக் கொண்டிருக்கிறாள் அந்த இளம் பெண்.

(க–46)

### நடிகர் நாகேஷ் மைத்துனர் கொலை வழக்கு அப்பீல்

சென்னை, ஆக. 16

செல்வராஜ் கொலை வழக்கு எனப்படும் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களின் அப்பீல்கள் மீது ஹைகோர்ட்டில் நீதிபதி திரு. என். கிருஷ்ணசுவாமி ரெட்டியின் முன்னிலையில் விசாரணை நடந்தது.

இவ் வழக்கில் ரெஜினா (நாகேஷின் மனைவி) மற்றும் ஏழு பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவர்கள் 1968 பெப்ரவரி 10-ம் திகதியன்று தியாகராயநகரில் சதி செய்ததாகவும், அந்த சதியைத் தொடர்ந்து செல்வராஜைக் கொலை செய்ததாகவும் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

சென்னை செஷன்ஸ் நீதிபதி அவர்களை கொலைக் குற்றச்சாட்டில் விடுதலை செய்தார். ஆனால் காயப்படுத்தியது, கொலைக் குற்றம் அல்லாத, ஆனால் மனித உயிரைப் போக்கிய குற்றம் முதலிய குற்றங்களைச் செய்ததாக அவர்களுக்கு இரண்டு வருஷம் முதல் நான்கு வருஷங்கள் வரை பல்வேறு சிறைத் தண்டனைகள் அளிக்கப்பட்டன.

முதலில் 11 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் மூவரை விடுதலை செய்து மற்றவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டது.

அப்பீல் தாரர்களுக்கு திரு. எஸ். மோகன் குமாரமங்கலமும், அரசாங்கத்துக்கு பப்ளிக் பிராஸிக்யூட்டரும் ஆஜராகிறார்கள்.

(க)

### அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகஐ.தொ.கா.தீர்மானம்

இந்தோ சீன மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்திவரும் வீரப்போராட்டம் சம்பந்தமாக, உலகத் தொழிற் சங்க சம்மேளனத்தால் வெர்செயில்சில் நடத்தப்பட்ட மகாநாட்டின் போது இந்தோ – சீன மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் முழு ஆதரவை வழங்குவது சம்பந்தமாக, உலகத் தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் காரியக் கமிட்டி பரிசீலனை செய்தது. அத்தோடு ஆசிய நாடுகளான, லாவோஸ், கம்போடியா, வியட்நாம் மக்களின் சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள், அச்சுறுத்தல் செய்து, தங்களின் ஆக்கிரமிப்பை ஆசிய நாடுகளில் பரவச் செய்வதையும் காரியக் கமிட்டி தீவிரமாக ஆராய்ந்தது.

இந்தோ சீன மக்களின் மேல் அமெரிக்கா நடத்தும் இன ஒழிப்பையும், ஆக்கிரமிப்பையும், உடனடியாக நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு, வியட்நாம், கம்போடியா உட்பட இந்தோ சீனத்திலிருந்து தனது முழுப்படைகளையும் அமெரிக்கா வாபஸ் பெற வேண்டும் என்றும் ஐ. தொ. கா. தீர்மானம் நிறைவேற்றியது.

இத்தீர்மானத்தை, ஐ. தொ. கா. தலைவர் திரு. அஸீஸ் எம். பி. தலைமையிலான தூது கோஷ்டி மூலம் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவரிடம் கையளிப்பதெனவும் காரியக் கமிட்டி முடிவு செய்தது.

(க)

### பாக். தேர்தல் ஒத்திவைப்பு

கராச்சி, ஆக. 16

பாகிஸ்தான் பொதுத் தேர்தல் டிசம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டு உள்ளது.

எதிர்வரும் அக்டோபர் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற இருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கே தேர்தல் ஒத்தி வைப்புக்குக் காரணம் என்று ஜனதிபதி, யஹ்யாகான் அறிவித்துள்ளார்.

ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் மூலம் 313 அங்கத்தவர்களைப் பாகிஸ்தான் மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

(க)

### தமிழ் நாடு தனக்கென தனிக்கொடி கேட்கிறது

சென்னை, ஆக. 16

தமிழ் நாடு ஒரு தனிக் கொடி வைத்துக் கொள்ள அனுமதிக்குமாறு பிரதம மந்திரிக்குத் தமிழ்நாடு அரசாங்கம் எழுதியிருப்பதாக முதன் மந்திரி திரு. கருணாநிதி இங்கு கூறினார்.

அனைத்துக் கல்லூரி மாணவர்கள் திரு. கருணாநிதிக்கு பாலர் அரங்கில் ஒரு வரவேற்பு அளித்தார்கள். அந்த வரவேற்பில் பேசிய போது முதன் மந்திரி மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

புதுக் கொடியின் மாதிரியைத் தமிழக அரசாங்கம் வரைந்து அனுப்பியிருக்கிறது. இந்தக் கொடியில், தேசியக் கொடியில் உள்ளதைப் போன்றே மூவர்ணங்கள் இருக்கும். ஆனால் அசோகச் சக்கரத்திற்குப் பதிலாகக் கோபுரச் சின்னம் இருக்கும். இந்தக் கோடியின் மூலையில் ஒரு பகுதியில் தேசியக் கொடியும் இடம் பெறும் என்று திரு. கருணாநிதி கூறினார். மத்திய அரசாங்கம் புதுக்கொடிக்கு அனுமதி தரும் என்று நம்புவதாகவும் அவர் சொன்னார்.

### திட்டமிட்டு மோசடி செய்தார் கணக்கப்பிள்ளை?

மன்னார், ஆக. 16

திட்டமிட்ட ஒரு மோசடிச் சம்பவத்தால், ஒரு பிரபல கடையில் இருந்து ரூ.10,000 அபேஸ் ஆக்கப்பட்டுள்ளது.

இக் கடையின் முதலாளி தன் கணக்கப்பிள்ளையில் முழு நம்பிக்கை வைத்திருந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த கணக்கப்பிள்ளை 15 வருடங்களாகக் கடமையாற்றுகிறார். இவர்தான் வியாபாரம், பணம் எல்லாவற்றிக்கும் பொறுப்பாக இருந்தார்.

தனக்கு இருந்த பொறுப்பை சாதகமாக்கி கடந்த 3½ வருடங்களில் இந்த மோசடியைச் செய்துள்ளார்.

வங்கிக்கு பணம் கட்டும் பொழுது ரூ.50 லிருந்து ரூ.150 வரை அடிக்கடி கையாடி விடுவார். முதலாளி, அவரின் மேல் வைத்த நம்பிக்கையால் சந்தேகப்படுவதில்லை.

திடீரென்று கிடைத்த துப்பின் மீது முதலாளி நடவடிக்கை எடுத்தார். மோசடி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கணக்கப்பிள்ளை வேலை நீக்கஞ் செய்யப்பட்டதுடன், மன்னார் பொலீஸிலும் புகார் செய்யப்பட்டுள்ளது.

(க–15)

### சகவாச தோஷம்

தென்னை மரத்தில் தேளைத் தேடியவனை யாவரும் அறிவர். அவன் உண்மையில் தேங்காய்க் கள்ளன் ஆவன். ஆனால் அகப்பட்டுக் கொண்டதும் அப்படி ஒரு "டுப்பை" அளந்தான் மரச் சொந்தக்காரனுக்கு. இது பழங் கதை. இப்போது இதே ரீதியில் ஒரு புதுக் கதை வந்துள்ளது. தென் மாகாணத்தில் மாட்டுக் கள்ளன் ஒருவனை அண்மையில் ஒரு படுகுழிக்குள் கண்டு பிடித்தார்கள். பொலீஸார் விசாரணை செய்தார்கள். "ஐயோ இரவு நேரத்தில் நான் வீட்டுக்குப் போகும் போது கால் தடுமாறிக் குழிக்குள் வீழ்ந்து விட்டேன்" என்றான் அவன். "அப்படியானால் மாடு எப்படி வந்தது?" என்றார்கள். "நான் விழுந்த போது அதனைக் குழிக்குள் கண்டேன்!" என்றான். சாதாரணமாக இந்தக் கதையை ஓரளவில் நம்பலாம். ஆனால் பேர்வழியை நன்றாகத் தெரிந்து கொண்டு எவரும் அவன் கதையை நம்புவார்களா? இதைத்தான் சகவாசதோஷம் என்பார்கள் பெரியவர்கள்.

தந்தி

### கிராமத்தில் நடைபெற்ற குழப்பத்தில் ஒருவர் கொலை

ஒருவர் கொல்லப்பட்டு, இருவர் காயமடைந்ததைத் தொடர்ந்து வெள்ளவாயா பொலீஸ் பகுதியில் பரபரப்பு அடைந்திருந்த பெட்டியநாரா கிராமத்தில் இப்போது அமைதி நிலவுகிறது.

பெட்டியநாரா கிராமத்தில் புதன்கிழமை இரவு நால்வர் கொண்ட கோஷ்டி ஒன்று புகுந்து அட்டகாசம் புரிந்து வெள்ளவாயா நகரிலும் இவர்கள் அட்டகாசம் புரியவே பொது மக்கள் திரண்டு எதிர்த்தனர்.

இந்த மோதலில் எச். ஜே. புஞ்சிபண்டா என்பவர் மரணமானார். இருவர் துப்பாக்கிச் சூட்டிலும் பொல்லால் தாக்கப்பட்டும் காயமடைந்துள்ளனர்.

இதுசம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் எச். எம். ஜோதிபால என்பவரை பதுளை பொலீசார் கைது செய்துள்ளனர். மூவர் தலைமறைவாகி உள்ளனர்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப் புகழ் பெற்ற கோடீஸ்வரர்

# ஒனஸிஸ் சகோதரர் சவக்குழி வெட்டுகிறார்

## அந்தத் தொழிலை அவர் புனிதமாகக் கருதுகிறார்

ஏதென்ஸ், ஆக. 16

உலகிலேயே பெரிய பணக்காரர்களில் ஒருவரும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கெனடியின் மனைவியை காதல் மனைவியாக ஏற்றதன் மூலம் உலகப் புகழ் பெற்றவருமான கிரேக்க கோடீஸ்வரர் ஒனஸிஸுக்கு ஒரு சகோதரர் இருக்கிறார். அவரின் தொழில் என்ன தெரியுமா? சவக்குழி தோண்டுவது தான்!

சவக்குழி தோண்டுவது! ஆம்; 61 வயது நிக்கலஸ் ஒனஸிஸ் ... ஒரு



புனிதமானதாகக் கருதுகிறார். பழைய ஒரு வீட்டில் வசித்து வருகிறார். இவர் வசிக்கும் கிராமத்தில் உள்ள அனைவருமே ஏழைகள் தான்.

"நான் ஒரு சாதாரண மனிதன். என்றுமே பேராசை கொண்டதில்லை. ஆடம்பரத்தில் எனக்கு விருப்பு கிடையாது. சூரியனும் கடலும் எனது மகிழ்ச்சிக்குப் போதுமானவை" என்று இவர் கூறிக் கொள்கிறார்.

தனது அண்ணனை அரிஸ்டோட்டில் ஒனஸிஸ் செல்வச் செழிப்பில் வாழ்வதையிட்டு இவர் பொறாமை கொள்ளவில்லை. அண்ணனின் உதவியுடன் செல்வந்தனாகவும் இவர் விரும்பவில்லை. அண்ணனைத் தம்பி சந்தித்து 10 வருடங்கள் ஆகின்றன.

தம்பி ஒரு கம்யூனிஸ்ட். இது அண்ணனுக்குப் பிடிப்பதில்லை. கொள்கையை விட்டுக் கொடுக்க தம்பிக்கு இஷ்டமில்லை. இதுவே அவர்களின் பிரிவினைக்குச் காரணம். (க)

## இளம் பெண்ணைப் பிடிக்க பொலீசார் வலைவீச்சு

கலிபோர்னியா, ஆக. 16

நீதிபதி ஒருவர் உட்பட நான்கு பேர் நீதிமன்றத்துக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து முன்னாள் பல்கலைக் கழக ஆசிரியை ஒருத்தியைப் பொலீசார் தேடி வருகின்றனர்.

செல்வி அங்கலா டேவிஸ் என்ற அந்த ஆசிரியை மீது கொலை, கடத்தல் ஆகிய குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஒன்பது தினங்களுக்கு முன்னர் கலிபோர்னியாவில் உள்ள மார்றின் என்ற இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் இந்தத் துப்பாக்கிச் சூட்டு நாடகம் நடைபெற்றது.

மார்றின் நீதிமன்றத்தில் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்ட மூன்று கறுப்பர்களைத் தப்புவிப்பதற்காக பின்னணியில் நின்று செல்வி அங்கெலா டேவிஸ் இந்த நாடகத்தை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இதற்காக அவள் மூன்று துப்பாக்கிகளை நீதிமன்றத்துக்குள் மறைத்து வைத்திருந்தாளாம். செல்வி அங்கெலா டேவிஸுடன் நீதிமன்றத்துக்குள் வந்த 17 வயது இளைஞன் ஒருவன் நீதிமன்றத்துக்குள் வைத்தே பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டான். நீதிமன்றத்துக்குள் வைக்கப்பட்டிருந்த மூன்று கறுப்பர்களையும் இவன் விடுவிக்க முயன்றபோது பொலீஸார் சுட்டனர். குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்ட மூன்று கறுப்பர்களில் ஒருவன் இந்த இளைஞனின் சகோதரன் ஆவான்.

இந்த இளைஞன் நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியபோது செல்வி அங்கெலா டேவிஸ் நீதிமன்ற வளவுக்குள் நின்று கொண்டிருந்ததாகப் பொலீஸார் நம்புகின்றனர்.

கறுப்பர் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட செல்வி அங்கெலா டேவிஸ் தனது கம்யூனிஸ்ட் சார்பு நடவடிக்கைகள் காரணமாக கலிபோர்னிய பல்கலைக் கழகத்தில் இருந்து பதவி நீக்கப்பட்டாள்.

தற்பொழுது இவள் கனடாவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (க)

## மந்திரி பீட்டர் கெனமனுக்கு ஜிந்துப்பிட்டியில் வரவேற்பு

"கம்யூனிஸ்ட் கட்சியோடு கூட்டுச் சேர்ந்த கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் இனக்கலவரம் ஏற்படும், கோயில்கள் இடிக்கப்படும் என யூ. என். பி. பொய்ப் பிரசாரம் செய்தது. இன்று நாம் ஆட்சிக்கு வந்து விட்டோம். இனக்கலவரம் ஏற்பட்டதா? கோயில்கள் இடிக்கப்பட்டனவா? எனக் கேட்க விரும்புகிறேன்."

வீடமைப்பு, நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் மேற்கண்டவாறு கேட்டார்.

ஜிந்துப்பிட்டி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தினால், சனிக்கிழமையன்று முருகன் தியேட்டருக்கு அண்மையில் அமைச்சர் திரு. கெனமனுக்கு பாராட்டுபசார பொதுக் கூட்டம் நடைபெற்றது.

திரு. கெனமன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"எமக்கு எதிராக வாக்களித்தவர்கள் இன்று எம்மை நாடி வருகின்றனர். கஞ்சா, கசிப்பு, பீடி முதலாளிமார்கள் எல்லோரும் "நாட்டைக் காக்கும் நிதி"க்கு உதவ முன்வருகின்றனர். நாட்டைச் சுரண்டியவர்கள் நாட்டைக் காக்க வருகிறார்கள். வரவேற்கிறோம். ஆனால் எம்மை ஏமாற்றலாம் என்று அவர்கள் நினைத்தால், அது அவர்களின் அழிவில்தான் முடியும்.

"மக்கள் நலன் பேணுவதில் தான் கம்யூனிஸ்ட் கட்சி நாட்டம் கொண்டுள்ளது. மக்களையோ, சமுதாயத்தையோ நசுக்கவல்ல.

"ஐக்கிய முன்னணி அரசில் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் உண்டு. பரதகுல மக்களின் பிரதிநிதியாக திரு. ஜோன் ரொட்ரிகோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கத்தோலிக்கர்கள் அத்தனை பேரும் அமைச்சர்களாயுள்ளனர். மக்கள் அரசாங்கம் மக்களுக்காக சேவை செய்யும்.

"செப்டம்பர் 26-ந் திகதி இரண்டு கொத்து அரிசி வழங்கப்படும். மற்றும் வாக்குறுதிகளையும் படிப்படியாக நிறைவேற்றுவோம். வாடகை வீடுகளில் குடியிருப்போருக்கு நல்ல எதிர்காலத்தைக் காட்டியுள்ளோன்.

"வகுப்புவாதம் சோஷலிஸத்தை ஒழித்து விடும். அது எப்பக்கத்தில் இருந்து கிளம்பினாலும் அதை நசுக்கிவிட வேண்டும். எல்லா இனத்தவரும் ஒற்றுமையுடன் இருந்தால் நல்லதொரு சோஷலிஸ சமுதாயம் உருவாகும்" என்று கூறினார்.

திருவாளர்கள் எஸ். ஆர். நடராசா, சிரில் ருகுணகே, நந்தா டீ சில்வா, ந. துரைசிங்கம் ஆகியோரும் பேசினர். (க-15)

## ஸ்ரீமாவுக்கு அமெரிக்கா அழைப்பு

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை அமெரிக்காவுக்கு விஜயம் செய்யுமாறு, அங்குள்ள வெளிநாட்டு பத்திரிகையாளர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய முன்னணி அரசு ஏற்பட்டபின் இலங்கை சிவப்பாக மாறியுள்ளது என்ற அமெரிக்கரின் தப்பபிப்பிராயத்தைப் போக்கப் பிரதமரின் அமெரிக்க விஜயம் உதவுமென்று அச் சங்கத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (க-15)

## 'உறுதி அளித்து என்னுடன் உடலுறவு கொண்டார்'

கண்டி, ஆக. 7

"குழந்தைப் பருவத்திலிருந்து எதிர்மனுதாரரை எனக்குத் தெரியும். நான் பருவப் பெண்ணாகியதும் என்னுடன் சிநேகிதமானார். பாடசாலையில் இருந்து என்னை விலகும்படி கூறினார். விலகினேன். என்னுடன் கூடி, நான் கர்ப்பிணியானதும் என்னைக் கைவிட்டு, வேறொரு பெண்ணை மணந்துவிட்டார்."

கலகெதர, அலுதெனியாவைச் சேர்ந்த பீ. ஏ. உக்குமெனிக்கா, கண்டி மாஜிஸ்டிரேட் திரு. பி. பி. ஜி. பெர்னாண்டோ, முன்னிலையில் விசாரிக்கப்பட்ட தாபரிப்பு வழக்கில் மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தார்.

ஏ. எம். உக்குபண்டா இவ்வழக்கின் எதிர்மனுதாரராவார்.

உக்குமெனிக்கா மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

ஒருமுறை நான் ரப்பர் தோட்டத்துக்குப் போகும்பொழுது, எதிர்மனுதார் என்னை உடலுறவு கொள்ள அழைத்தார். நான் மறுக்க பலாத்காரம் செய்தார். இதுபற்றி வழக்கு நடந்தது, சமாதானமாகத் தீர்ந்தது.

அதன்பிறகும் அவர் என்னுடன் சிநேகமாக இருக்க விரும்பினார். 1968 ஜனவரி 8-ம் திகதி, பெற்றோர் வீட்டில் இல்லாதபோது அவர் வந்து என்னுடன் முதல் முறையாக உடலுறவு கொண்டார். என்னை மணப்பதாகக் கூறியதால் நான் அவருடன் ஓடிப்போனேன். எனக்கு ஒரு குழந்தையும் உண்டு என்று கூறினார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (க- 15)

## 'வாயுமெத்தை வாகனம் தீவுப் பகுதிக்கு உகந்தது'

"தீவுப் பகுதியில் போக்குவரத்திற்கு வாயுமெத்தை வாகனங்கள் மிக உகந்தவை. இந்த வாகனங்களின் செயல் திறன் பற்றி இலங்கை திரும்பியதும் நான் நீர்ப்பாசன மின் சக்தி அமைச்சருக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிப்பேன்."

மேற்கண்டவாறு திரு. திசவீரசிங்கம் நேற்று முன்தினம் லண்டனில் கூறினார். அரசாங்க பெருவீதிப் பிரிவின் உதவி அதிபராகக் கடமையாற்றும் திரு. திசவீரசிங்கம் மற்றைய இரு அரசாங்க அதிகாரிகளுடன் தற்சமயம் பிரிட்டனில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்.

இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த பொறியியல் நிபுணர் திரு. ஜே. எச்ஸ். எல். பிலிப்ஸ், நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. சி. டபிள்யூ. ஏ. றேய் ஆகியோரே மற்றைய இருவருமாவர்.

பிரிட்டிஷ் வெளி விவகார, சாம்ராஜ்ய காரியாலயத்தின் விருந்தினராக ஒரு மாத கால சுற்றுலாவை மேற்கொண்டு வரும் இவர்கள் பிரிட்டனின் வீதி நிர்மாணத்துறை, மின்சார உற்பத்தி, மற்றும் பல்வேறு ஆராய்ச்சித் துறைகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர். 7(க)

**தவறாத வசிய பரிகாரம்**

காதலில் வெற்றி பெறுவதற்கு, நிரந்தரமானதற்கு, மற்றும் பெற்றோரின் விருப்பத்தை பெறுவதற்கும் மலையாளி பரிகாரம் செய்து கொடுக்கப்படும். இதுவரைக்கும் பரிகாரம் பெற்று பலன் கிடைக்காதவர்கள் இன்றே எமக்கு எழுதி உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்களை பெறுங்கள்.

**சிவபாலன்**

**குப்த, வித்தியாயதனய,**

உளுப்பொலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் வீடுகளில் வாடகைக்கு வசிக்கும

# குடியிருப்பாளர்கள் அஞ்சத் தேவையில்லை

## வீடமைப்பு விசேட கமிட்டி அறிக்கை


"தனி வீட்டுச் சொந்தக்காரர்களின் வீடுகளில் வாடகைக்கு இருப்போரை வெளியேற்ற வீடமைப்பு சம்பந்தமான விசேட கமிட்டி (1970) எத்தகைய சிபார்சும் செய்யாது. இதையிட்டு எவரும் அச்சம் கொள்ளத் தேவை இல்லை."

வீடமைப்பு விசேட கமிட்டி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

வீட்டுச் சொந்தக்காரர்கள் செய்த புகாரை அடுத்து, இந்தக் கமிட்டி தனி வீட்டுச் சொந்தக்காரரின் வீடுகளில் வாடகைக்கு இருப்போரை வெளியேற்ற சிபார்சு செய்யலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிலவியது.

குடியிருப்பாளருக்கு வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் அளித்திருக்கும் பாதுகாப்பை அகற்ற இக் கமிட்டிக்கு அதிகாரம் இல்லை என்பதும் இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(க-15)



நிர்வாணப் பிரார்த்தனையின் போது ஆடை அணிந்து வந்த பாதிரியார் ஒரு இக்கட்டான நிலையில் காணப்படுகிறார்.

## சீமாட்டி ஆகிவிட்டார்

லண்டன், ஆக. 16

எலிசபெத் மகாராணியாரின் மகளான இளவரசி ஆன் இன்று 20 வயதுப் பெண்ணாகி விட்டார். இனியும் விளையாட்டுப் பிள்ளை போல் இராது அரச குடும்ப சம்பிரதாயங்களை கடைப் பிடிக்கும் சீமாட்டியாக அவர் நடந்து கொள்ள வேண்டியவராகியுள்ளார்.

பொது மக்களைக் கண்டால் புன்னகை புரிவதில்லை; எந்த விஷயத்தையும் எடுத்தெறிந்து பேசிவிடுவது, முன்கோபம், ஆகிய குறைகள் இளவரசிக்கு உண்டு என கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்த விஷயத்தில் இவர் "அப்பா எடின்பரோ கோமகனுக்கு ஏற்றபிள்ளை" என்று பெயர் பெற்றிருந்தார்.

ஆனால் இன்று இளவரசி தனது பொறுப்பை உணர்ந்தவராகி விட்டார். யாரும் மெச்சத்தக்க விதத்தில் தன்னை அவர் மாற்றிக்கொள்வார் என பக்கிங்காம் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

(கு)

## இந்திய சுதந்திர தின விழாவன்று கலவரம்

கல்கத்தா, ஆக. 16

இந்தியாவின் சுதந்திர தினம் ஒரு புறம் கொண்டாடப்பட்ட போது, மறுபுறம் தீவிர இடதுசாரிகள் இந்தியத் தேசியக் கொடிகளை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். கலவரங்களின் போது ஒருவர் கொல்லப்பட்டார். 30 பேர் காயமுற்றனர்.

இந்தியக் காங்கிரஸ் கட்சியின் இரு பிரிவினரும் கைகலப்பில் ஈடுபட்ட போது அதை அடக்க பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். கலகக் காரர்கள் கைக்குண்டுகளையும், போத்தல்களையும் வீசி கலவரம் செய்தனர்.

தீவிர கம்யூனிஸ்டுகள் கல்கத்தாவிலுள்ள பெரிய கட்டடங்களில் பறக்கவிடப்பட்டிருந்த இந்தியத் தேசியக் கொடிகளை இறக்கி தீயிட்டுக் கொளுத்தி விட்டு செங்கொடிகளைப் பறக்க விட்டனர். இது சம்பந்தமாக 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் புதுடில்லியில் தீவிர இடதுசாரிகள் ஒரு மகாராஜாவின் மாளிகையை ஆக்கிரமித்தனர். ஒரு மிகப் பெரிய "கோல்ப்" விளையாட்டு மைதானம் அவர்கள் வசமானது. பண்ணை ஒன்றையும் அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

செல்வந்தர்கள் "தேவைக்கு அதிகமாக" வைத்திருக்கும் சொத்துகளைப் பலவந்தமாக அபகரித்து ஏழைகளுக்கு வழங்கும் கம்யூனிஸ்டுகளின் "நிலப்பறி இயக்க"த்தின் ஒரு அம்சமே இதுவாகும்.

பம்பாயிலுள்ள மகா லக்ஷ்மி குதிரைப் பந்தாட்டத் திடலுக்குள் ஏராளமான பெண்கள் உட்பட ஒரு ஆர்ப்பாட்டக் கோஷ்டி புகுந்து அங்கே அடுப்பு மூட்டியது.

மைசூர் மகாராஜாவின் மாளிகை வாசலை உடைத்தெறிந்து உட்புகுந்து அங்கே ஒரு செங்கொடியைப் பறக்க விட முயன்ற ஒரு கம்யூனிஸ்ட் சட்டசபை உறுப்பினரையும் அவரது ஆதரவாளர்கள் 15 பேரையும் பொலீஸார் கைது செய்தனர்.

தனர்.

(கு)



நிர்வாணக் கூட்டத் தலைவர், நிர்வாண கோலத்தோடு புன்சிரிப்புடன், பியானோ வாசிக்கிறார்.

## நிர்வாண கோலத்தில் ஆலயத்தில் பிரார்த்தனை

பிறந்த கோலத்தில், ஆலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளார்கள் ஆடவரும் அரிவையரும். எந்த வித ஆடையோ. மேக் அப்போ இன்றி, இயற்கைக் கோலம் அவர்களுக்கு நிம்மதி கொடுத்திருக்கிறது.

சர்வதேச இயற்கை சம்மேளனத்தைச் சேர்ந்த இவர்கள், வட கெண்ட் நகரிலுள்ள தேவாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் பங்குபற்றினார்கள் இச் சம்மேளனத்தின் 12-வது மகாநாட்டின் போது இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

கூச்சம் எதுவுமின்றி, நிர்வாணமாகக் காட்சியளித்த இவர்கள், மத்தியில், கூச்சப்பட்டவர் ஒருவரும் இருந்தார், அவர்தான் புனித மரியாள் தேவாலய பிரதம பாதிரியார் வண. டொனல்ட் ஷெரீவ். பாதிரியார் கறுப்பு உடையுடன் கலவரத்தோடு காணப்பட்டார்.

நிர்வாண பிரார்த்தனையின் போது, இக் கூட்டத்தினரின் தலைவர் பிரியன் டொரன கூ ஒரு சிறு புன்னகையுடன் வீற்றிருந்தார்.

(க-15)


கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

S. P. S. ஜெயம் அன் கோ.

மதுரை - கொழும்பு.

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு,

கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584





இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை)- வெளியிட்ட திகதி 17 ஆகஸ்ட் 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12, (Ceylon)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org